


18.05.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு 5ஆம் கட்டமாக வரும் திங்கட்கிழமை நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் ஓய்கிறது.

2. 2047ஆம் ஆண்டு வளர்ந்த தேசமாக இந்தியாவை உருவாக்கும் ஒரே நோக்கத்துடன் தாம் பணியாற்றி வருவதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி கூறினார்.

3. அரசியல் சாசனத்தை பாதுகாக்க வரும் தேர்தலில் ஐ.தேனு.ஐ கூட்டணி வெற்றிபெறுவது அவசியம் என்று காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்வதால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் இன்று சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

5-ம் கட்டம்

மக்களவைக்கு 5ஆம் கட்டமாக வரும் திங்கட்கிழமை நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் ஓய்கிறது.

அஸ்ஸாம் ஜார்கண்ட், உத்திரபிரதேசம் உள்ளிட்ட 6 மாநிலங்கள் 2 யூனியன் பிரதேசங்களின் 49 மக்களவை தொகுதிகளுக்கு நடைபெறும் இத்தேர்தலில் மத்திய அமைச்சர்கள் திரு.ராஜ்நாத்சிங், திரு.பியூஷ்கோயல்,

திருமதி ஸ்மிருதி இராணி, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.ராகுல் காந்தி உள்ளிட்ட 695 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி ஹரியானா மாநிலம் அம்பாலா, சோனிபட் உள்ளிட்ட இடங்களில் இன்று பரப்புரையில் ஈடுபடுவதோடு, வடகிழக்கு டெல்லி பகுதியில் தேர்தல் வாகன பேரணியிலும் பங்கேற்கிறார்.

முன்னதாக நேற்று மும்பையில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் மக்களவை தேர்தலில் பிஜேபி சாதனை எண்ணிக்கையில் வெற்றிபெறும் என்று கூறியுள்ளார்.

2047ஆம் ஆண்டு வளர்ந்த தேசமாக இந்தியா மாறும் வகையில் தாம் முனைப்புடன் பணியாற்றுவதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.ராகுல் காந்தி உத்திரபிரதேச மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும், புதுதில்லியிலும் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே அரசியல் சாசனத்தை பாதுகாக்கவும், நல்லாட்சி வழங்கவும், இத்தேர்தலில் ஐ.டே்னு.ஐ கூட்டணி வெற்றிபெறுவது அவசியம் என்றார்.

அமலாக்கத்துறை உள்ளிட்ட மத்திய புலனாய்வு அமைப்புகள் தவறாக பயன்படுத்தப்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

சமாஜ்வாடி கட்சி தலைவர் திரு.அகிலேஷ் யாதவ், பகுஜன் சமாஜ்கட்சி தலைவர் செல்வி மாயாவதி உள்ளிட்ட பிரதான கட்சி தலைவர்கள் வாக்கு சேகரிக்கும் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

பீகார், ஹரியானா, ஒடிசா உள்ளிட்ட 7 மாநிலங்களின் 57 தொகுதிகளுக்கு வரும் 25ஆம் தேதி 6 ஆம் கட்டமாகவும்,

ஹிமாச்சல பிரதேசம், பஞ்சாப், உத்திரபிதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட 8 மாநிலங்களின் 57 தொகுதிகளுக்கு வரும் ஜூன் 1 ஆம் தேதி 7ஆவது இறுதி கட்டமாகவும் தேர்தல் நடைபெறும் நிலையில் இதற்கான பரப்புரையிலும் அரசியல் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4ஆம் தேதி நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வாக்கு எண்ணும் மையம் - திருச்சி

தமிழகத்தின் 39 தொகுதிகளில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

திருச்சி மக்களவை தொகுதி வாக்கு எண்ணும் மையமான ஜமால் முகமது கல்லூரியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராக்கள் அனைத்தும் 24 மணி நேரமும் தடையின்றி இயங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சித்தலைவருமான திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சிகள் அடுத்த வாரம் தொடங்கும் என்றார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஷாங்காய்

கஸகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நாளை மறுநாள் நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்க உள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு.ரந்தீர் ஜெய்ஷ்வால், இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சக செயலாளர் திரு. தாமு ரவி இதில் பங்கேற்பார் என்றார்.

மத்திய ஆசிய நாடுகளுடன் வர்த்தகம் மேற்கொள்ள ஈரானில் உள்ள ச்சபாகர் துறைமுகம் இந்தியாவிற்கு பயனளிப்பதாக அவர் கூறினார்.

இதுதொடர்பாக இந்தியாவிற்கும் ஈரானிற்கும் நீண்டகால ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சர்வதேச அருங்காட்சியக தினம்

சர்வதேச அருங்காட்சியக தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சமூக வளர்ச்சியில் அருங்காட்சியகங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் மதுரை, வேலூர், மாமல்லபுரம் சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் உள்ள அரசு அருங்காட்சியகத்தை ஏராளமானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

அருங்காட்சியகங்கள் உன்னதமான சமூகத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாக திகழ்வதாக மதுரை காந்தி நினைவு அரசு அருங்காட்சியக காப்பாளர் முனைவர் மருதுபாண்டியர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

மழை மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்வதால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு காரணமாக குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஆணைவாரி முட்டல் நீர்வீழ்ச்சியில் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்கவும், படகு பயணம் மேற்கொள்ளவும், மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

கன மழை வெள்ளப்பெருக்கு காரணமாக திருப்பூர் மாவட்டம் உடுமலை திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவி மற்றும் கோவில் பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் பெய்த கன மழை காரணமாக ஆகாய கங்கை, சிற்றருவி, மாசிலா அருவி, புளியஞ்சோலை உள்ளிட்ட 4 அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்றும் நாளையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

உதகைக்கு 3 நாட்களுக்கு சுற்றுலா பயணிகள் வருவதை தவிர்க்குமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா அறிவுறுத்தியுள்ளார்.

கடல் கொந்தளிப்பு காரணமாக கன்னியாகுமரி கடலில் இறங்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வைகை அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட 3 ஆயிரம் கன அடி தண்ணீர் சிவகங்கை மாவட்டம் திருபுவணம் லாடநேந்தல் மானாமதுரை உள்ளிட்ட பகுதிகளை வந்தடைந்துள்ளன.

தற்போது மழைநீரும் சேர்ந்து வருவதால் ஆற்றுபகுதிகளில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் அறிவுறுத்தியுள்ளார்.

அதி கன மழை எச்சரிக்கையை அடுத்து சென்னையிலிருந்து தலா 90 பேர் கொண்ட மீட்பு குழுவினர் நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு பாதுகாப்பு பணிகளுக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மிதமான மழை இன்று பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

கல்லூரி கனவு

திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு உயர்கல்விக்கான வாய்ப்புகள் குறித்த ஆலோசனைக்கூட்டத்தை ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்கல்வி செல்லும் மாணாக்கருக்கு துறை சார்ந்த பல்வேறு படிப்புகளுக்கு ஏற்றவாறு கல்வி உதவிதொகை பெற வாய்ப்புகள் இருப்பதாக குறிப்பிட்டார்.

கல்வியாளர்கள் உள்ளிட்ட பல்துறை வல்லுநர்கள் உயர்கல்விக்கான வாய்ப்புகளை மாணாக்கரிடையே இதில் எடுத்துரைத்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் கல்லூரி கனவு வழிகாட்டுதல் நிகழ்ச்சி மற்றும் அரசின் திட்டங்களை மாணாக்கர் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என ஆட்சித்தலைவர் திருமதி வளர்மதி தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஏற்காடு கோடை விழா

சேலம் மாவட்டம் ஏற்காடு 47 ஆவது கோடை விழா வரும் 22ஆம் தேதி தொடங்கி 5 நாட்கள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பிருந்தா தேவி அறிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சிறுத்தை

நெல்லை பாபநாசம் அருகே பொதுமக்களை அச்சுறுத்திவந்த சிறுத்தை உயிருடன் பிடிக்கப்பட்டு மாஞ்சோலையை அடுத்த கோதையாறு அடர்ந்த வனப்பகுதியில் விடப்பட்டதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பனை ஓலை

மதுரையில் பனை ஓலையில் ஓவிய பயிற்சி முகாம் வரும் 25ஆம் தேதி தொடங்குகிறது.

பனை ஓலை பயன்பாட்டிற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் வர்த்தக தொழில்துறையின் வேளாண் உணவு பிரிவு அமைப்பின் கீழ் இந்த பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

திருப்பூரில் ஆதரவற்ற மற்றும் மன நலம் பாதிக்கப்பட்ட 20க்கும் மேற்பட்ட முதியவர்கள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் கீழக்கணவாய் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2ஆம் ஆண்டு நேரடி மாணாக்கர் சேர்க்கைக்கு வரும் 20ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி கற்பகம் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மண் புழு உரம் தயாரித்தல் மற்றும் ஊட்டம் ஏற்றிய மக்கும் உரம் தயாரித்தல் குறித்த ஒருநாள் பயிற்சி வரும் 23ஆம் தேதி நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் பள்ளி வாகன தணிக்கையை ஆட்சித்தலைவர் திருமதி ஆனி மேரி ஸ்வர்ணா இன்று நேரில் ஆய்வு செய்தார்.

செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலர்கள் 320 பள்ளி வாகனங்களை இன்று ஆய்வு செய்தனர்.

ஓட்டுநர் உரிமம், வாகனங்களுக்கான ஆவணங்கள், உள்ளிட்டவற்றை இக்குழுவினர் பார்வையிட்டனர்.

தஞ்சை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டீன் டாக்டர் பாலாஜி தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் பெரிய அளவில் பாதிப்புகள் கண்டறியப்படவில்லை என கூறிய அவர் எனினும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தற்போது நிலவும் தட்பவெப்ப மாறுபாட்டிலிருந்து மரவள்ளி பயிர்களில் ஏற்படும் தாக்குதலை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரவன்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களுருவில் இன்று சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுருவை எதிர்கொள்கிறது.

இன்றைய போட்டியில் வெற்றி பெறும் அணி பிளே ஆ.ஃப் சுற்றுக்கு தகுதி பெறும் என்பதால் ரசிகர்கள் இப்போட்டியை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

19 புள்ளிகளுடன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் முதல் இடத்திலும்,

16 புள்ளிகளுடன் ராஜஸ்தான் ராயல்ஸ் 2 ஆம் இடத்திலும்

15 புள்ளிகளுடன் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் 3ஆம் இடத்திலும் உள்ளன.

இந்த மூன்று அணிகளும் ஏற்கனவே பிளே ஆ.ஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு